

யாழ்ப்பாண மாவட்டம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும்
வேலணை 6ம் வட்டாரம். உதயநகர் கிழக்கு கிளிநொச்சியை
வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வகுல வழித்தோன்றல்

## அமரர் சின்னத்துரை வாமதேவன்

அவர்களின் பிரிவு குறித்த

# "தந்தை அமுதம்"




11.12.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ



யாழ்ப்பாண மாவட்டம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும்

வேலணை 6ம் வட்டாரம்,

உதயநகர் கிழக்கு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும்

கொண்ட விஸ்வகுல வழித்தோன்றல்

# அமரர் சின்னத்துரை வாமதேவன்

அவர்களின் பிரிவு குறித்த

# "தந்தை அமுதம்"

11.12.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்பணம்

உங்கள் பாதார விந்தங்களுக்கு
சமர்ப்பணம் அப்பா

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் மிளிர்ந்து
இவ்வுலகில் நாம் வாழ நல்வழி காட்டி
இல்லற வாழ்வை எளிமையாக வாழ்ந்து
பிள்ளைச் செல்வங்களை பெருவாழ்வு வாழ வைத்து
பேரப்பிள்ளைகளுடன் பேரன்போடு வாழ்ந்து
எல்லோர் மனதிலும் நிலையான இடம்கொண்டு
இம்மண்ணக வாழ்வை விடுத்து
விண்ணக வாழ்வை நாடிச் சென்ற
சின்னத்துரை வாமதேவன் அவர்கள்
காளியம்மன் திருவடிதனில் தாழ்பணிய
நாம் நினைவுகள் கலந்த
"தந்தை அமுதம்" எனும் இம்மலரை
தந்தைக்கு காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

அன்னை மடியில்

11 . 04 . 1951



ஆண்டவன் கரம்தனில்

23 . 11 . 2022

அமரர்

# சின்னத்துரை வாமதேவன்

திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சுபகிருது ஆனதிங்கள் கார்த்திகையில்
பூண்ட திதி அமாவாசைதனில் - சிரோடு
வாழ்ந்த உத்தமனார் வாமதேவன்
காளியம்மன் தாழ் பற்றினார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திர திரட்டு



## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவர் என்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பலவேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும்போது உன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே
தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்துரை வாமதேவன்
## அவர்களின்
# வாழ்க்கை சுவடுகளில் நினைவுகளாக...

கடல் அலைகளால் தாலாட்டு பாடி இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இலங்கை தீவின் தலையாக விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் யாழ்நகர் நீராவியடியில் சீரும் சிறப்போடும் வாழ்ந்த விஸ்வகுல திலகர் சின்னத்துரையும் அவர் மனையாள் சின்னத்தங்கமும் நடாத்திய இல்லறத்தின் தவப்பயனாக நான்காவது பிள்ளையாக 1951.04.11ம் திகதி இப்பூமியில் அவதரித்த சின்னத்துரை வாமதேவன் என்பவரே இன்றைய நம் நினைவுக்குரியவர். இவருடன் நேர் மூத்த சகோதரர்கள் சகோதரியாக லீலாவதி, செல்வரட்ணம், கோபால் மற்றும் இளைய சகோதரனாக துரைசிங்கமும் உடன் பிறந்தனர்.

சிறுவயது முதல் கல்வியில் ஆர்வம் கொண்டு தனது இளமைக் கல்வியை யாழ் இந்து கல்லூரியில் கற்று பின்னர் தமது குலதொழிலான மரத்தொழிலை தந்தையுடன் சேர்ந்து கற்றுத் தேறினார். அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றார். திருமணப் பருவம் அடைய இவருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையாக வேலணை 6ம் வட்டாரத்தில் சிறப்புடன் வாழ்ந்த பேரம்பலம் அவர் மனையாள் செல்லம்மாவும் செய்த இல்லற வழிவந்த புதல்வி உலகேஸ்வரி(கிளி) என்பவரை 1975ம் ஆண்டு பங்குனி மாதம் 17ம் நாளில் கரம் பிடித்து மணம் முடித்தார். திருமணத்தின் மூலம் தனலட்சுமி, தணிகாசலம் என்போரை மைத்துனி மைத்துனராக்கி இல்வாழ்வில் இணைந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மங்கலமென்பது மனைமாட்சி மற்றதன் நன்கலம்

நன்மக்கட் பேறு" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க நன்மக்களாக சுபாகரன்(சிவா), சுதர்சன், சுதன், சுகந்தன், சுகிர்தா(தங்கா) என்னும் ஐவரை நன் மக்களாக பெற்று மகிழ்ந்தார்.

'எந்த பிள்ளையும் நல்ல பிள்ளைதான் மண்ணிற் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.." என்ற பாடலுக்கமைய கணவனும் மனைவியும் தமது பிள்ளைகளை பண்பாளர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் வளர்த்து வந்தனர். நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலை காரணமாக 1990ம் ஆண்டு ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் குடியேறி குடும்பத்தினருடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தனர்.

பிள்ளைகளின் நலனுக்காக அயல்நாடு சவுதியில் சில காலம் குடியேறி பிள்ளைகளுக்கு செல்வம் தேடி அவர்களை சிறந்த முறையில் வாழ்வதற்கு வழிவகுத்தார். காலம் வேகமாக சுழன்றுவர பிள்ளைகளும் வேகமாக வளர்ந்துவர, நான்காவது மகன் சுகந்தன் 2000ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3ம் நாள் நெருப்பு காய்ச்சல் நோயினால் அவதியுற்று இறைவன் பாதத்தை தழுவிக்கொண்டான். தனயன் இழப்பை தாங்கி மற்றைய பிள்ளைகளின் சிறப்புக்களில் கவனத்தை செலுத்தினார். மூத்த மகன் சுபாகரனை பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பி தனயன் குடும்ப பொறுப்பை ஏற்க 2005ம் ஆண்டளவில் கிளிநொச்சி, உதயநகரில் காணி வாங்கி புதுமனை அமைத்து பிள்ளைகளுடன் நல்வாழ்வைத் தொடர்ந்தார். பிள்ளைகள் திருமண பருவம் அடைய அவர்களுக்கேற்ற துணைகளைத் தேடி நல்வாழ்வு வாழ வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தமகன் சுபாகரனை யாழ்ப்பாணம் கரணவாய் பகுதியில் சிறப்புடன் வாழ்ந்த சுப்பிரமணியம் தெய்வநாயகி தம்பதியரின் புதல்வி சுஜிதாவை திருமணம் செய்து வைத்து இவர்கள் இல்லறவழி வந்த சானுஜா, சந்தோஸ், சயானி எனும் பேரப்பிள்ளைகள் கண்டு மகிழ்ந்தார்.

இரண்டாவது மகன் சுதர்சனை கிளிநொச்சியில் சிறப்புடன் வாழ்ந்த குமாரசாமியும் அவர் மனையாள் பரமேஸ்வரியும் இணைந்த இல்லறவழி வந்த புதல்வி ஜெயராணியை திருமணம் செய்து வைத்து கிளிநொச்சியில் வாழ்வதைக் கண்டு மகிழ்ந்தார்.

காலங்கள் செல்ல நாட்டின் அசாதரண போர் சூழ்நிலையில் சுதர்சனையும் அவர் மனையாளையும் இழந்து வருந்தினார். காலங்கள் உருண்டோட ஆசைமகள் சுகிர்தாவை நடராசா மனோன்மணி தம்பதியரின் மகன் ரவிக்குமாருக்கு திருமணம் செய்து வைத்து இவர்கள் இல்லறவழிவந்த பேரப்பிள்ளைகள் சாருஜன், சங்கீத், சிவானி கொஞ்சி குலாவி மகிழ்ந்தார்.

மூன்றாவது மகன் சுதனை யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஸ்ரீபன் புவனேஸ்வரி தம்பதியரின் புதல்வி கஜாவை திருமணம் செய்து வைத்து இவர்கள் இல்லறவழி வந்த பேரப்பிள்ளைகள் சர்வின், சர்னிகா, சர்நிஷா என்போரைக் கண்டு களைத்து மகிழ்ந்தார்.

பிள்ளைகள் அனைவரும் சந்தோசமாக இருப்பதைக் கண்டு கணவனும் மனைவியும் சந்தோசத்தில் திகழ்ந்தனர். காலவோட்டத்தில் 2014 புரட்டாதி மாதம் 27ம் நாளிலே கரம் பிடித்த மனைவி காலனின் சதியால் நோய்வாய்ப்பட்டு இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம் சரண்புகுந்தார். அன்றிலை இழந்த பறவைபோல் தனியாக வாடி தனது மனையாள் கடமைகளை சரிவர செய்து முடித்தார்.

காலம் செல்லச் செல்ல பிள்ளைகளும் பிறநாட்டில் இருந்து குடும்பத்தோடு வந்து தந்தையாருடன் ஆண்டுக்கு ஒரு முறை சிலகாலம் வாழ்ந்து சென்றனர். தன்மனையில் சுதந்திரமாக நடமாடித் திரிந்தவர் வயது முதிர்வை தொட்டுச் செல்ல நோய்வாய்பட்டு சில நாட்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஓரிரு நாட்களில் சிகிச்சை பலனளிக்கத் தவறி 2022ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் நாள் அமாவாசைத் திதியினில் பெற்ற பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கதறி அழ அன்னாரது ஆத்மா இப்பூவுலகை விட்டுப் பிரிந்து வானுலகம் சென்று காளியம்மன் பாதம் பற்றிக்கொண்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போமாக...!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் மீதான இரங்கற் பாக்கள்
## மகன் சுபாகரன் (சிவா) அழுது சொல்லியவை

மூத்தவன் என்று மொத்த பாசத்தையும்
அள்ளித்தந்த என் அன்பான அப்பாவே!!
அசாதரண சூழ்நிலைகளிலும் எமை
அரும்பாடு பட்டு வளர்த்தாயே அப்பா!!!

நாட்டின் நிலைமையால் நாலுதிசை நாம் மாறி
அன்னையோடு நீயிருக்க அழகான மனையமைத்து
வாழ்ந்த ஞாபகங்கள் தொடராய் வருகுதப்பா!!
அதை எண்ணும் போதுமனமெல்லாம் கனக்குதப்பா!!!

ஆண்டுக்கொருமுறை அருகில் வந்து நலம் வினவி
அன்போடு எமை பார்த்திருந்தாயே அப்பா!!
சுபா சுபா என்று அழைத்துகுரல் கேட்குதப்பா - இன்று
வீட்டின் வெறுமையை தந்து நீங்கள் சென்றதேனோ!!!

அம்மாவுக்கு கிட்டாத கொள்ளிக்கடமை
தந்தை உனக்குத்தான் கிட்டியதே அப்பா!!
மாதமொன்று ஆகியும் கண்மூடி அழுகின்றேன்
கண்முன்னே வந்து என்கண்ணீர் துடைப்பாயோ அப்பா!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் சுதன் அழுது புலம்பியவை

சீரோடு நாம் வாழ சிறுவயது முதலே - அயல்நாடு
சென்று அரும்பாடுபட்டு வளர்த்தாயே அப்பா
தப்பேதும் செய்தாலும் அன்போடு அரவணைத்து
கண்டிப்பாக அறிவுரை மட்டும் கூறுவீரே அப்பா!!!

ஆஸ்பத்திரியில் இருந்து நலமோடு வருவாய் என்று
நாளொரு நாளாய் காத்திருந்தோமே அப்பா!!
எம் நினைவெல்லாம் கனவாகிபோக - நீர்
அம்மாவின் கரம்பற்றி சென்றாயே அப்பா!!!

வீரத்தோடு நடமாடிய உன்னுருவம் கண்டு
எம்சொத்து என்று பெருமிதமாய் இருந்தோமே!!
இன்று கண்ணாடிக்குள் நிழற்படமாய் எம்முன்னே
சிரித்தபடி இருக்கின்றாயே அப்பா!!!

அப்பா! அப்பா!! என்று அழைத்து பார்கிறேன்
பதிலேதுமின்றி பார்கின்றது உன் நிழற்படம்!!!
நினைவுகள் இருக்கும்வரை நிஜமாக இருந்து - இனி
அம்மாவோடு சேர்ந்து அன்போடு வழிநடத்துவீர் அப்பா!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் சுகிர்தா (தங்கா)
## அழுது சொல்லியவை

ஆசைமகள் என்று அன்பாக இருப்பாயே
செல்லமகள் என்று செல்வதியாய் வளர்த்தீரே அப்பா!!
அப்பா!! அப்பா!! என்று நானழைக்க
அன்போடு கதைபேசும் ஆருயில் அப்பாவே!!

கண்கலங்க விடாமல் இன்றுவரை காத்தவரே
வேண்டியதெல்லாம் எமக்கு நேரத்தோடு தந்தவரே
கண்டிப்பு சிலவேளை இருந்தாலும் மறுகணமே
அன்போடு அரவணைக்க உனக்குநிர் யாரப்பா?!!

பந்தமென்று இருந்த துணை – அப்பா
இன்று பார்விட்டு நீங்கள் போனதேனோ!!
சொந்தமென்று எமக்கு இருந்த அப்பா
சொர்க்கவாசல் நீங்கள் தேடிப் போனதேனோ!!

ஒய்வெடுத்துபோன உடலை ஓடிவந்து பார்க்கவில்லை
ஒவ்வொன்றாய் எண்ணி அழுது மாதமாகுதப்பா!!
இன்றும் எம்வீட்டில் நீர் இருக்கின்றீர் என்ற
நினைவோடுதான் நாம் வாழ்கின்றோம் அப்பா!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள் சுஜிதா சொல்லியவை

மருமகள் மருமகள் என்று மனங்குளிர
எனையழைக்கும் என் ஆசை மாமாவே!!
ஆண்டுக்கொருமுறை உன்னருகில் வந்து
உன்நலம் பார்த்து வாழ்ந்தோமே மாமா!!

அருகில் இருந்துவிட்டால் மணிக்கணக்காய் பேசி
மனங்குளிர வைக்கும் என் ஆசை மாமாவே!!
உன்பேரப்பிள்ளைகளை உச்சிமோந்து
முத்தமிட்டு அரவணைத்து மகிழ்வாயே மாமா!!

சொந்தமென்று நாம் இங்கிருக்க - நீங்கள்
தூரதேசம் சென்றதேனோ எம்மாசை மாமாவே!!
மாமா மாமா என்று அழைத்துத்தான் பார்கிறேன்
மருமகள் என்ற குரல் ஓய்ந்ததுதானே விதியாச்சு மாமா!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள் கஜா சொல்லிப் புலம்பியவை

தொலைவாக இருந்தாலும் தொடர்போடு இருந்தோமே
மாமா மாமா என்றழைக்க பாசமோடு கதைப்பவரே!!
உறவென்று உமைப்பார்க்க வருவோமே என்று இருக்க
இன்று மொத்தமாக கனவாக்கி நீரும் சென்றதேனோ மாமா!!

தொலைபேசி எடுத்தால் தொடராக பேசுவீரே மாமா!!
மகள்போன்று பாசமாய் மனம்விட்டு பேசுவீரே மாமா!!
ஆஸ்பத்திரியில் இருந்தபோதும் ஆறுதலாக பேசினீரே
இப்பிறப்பில் உமை இனி எப்போது காண்போமோ!!

சிரிப்போடு நடமாடிய உன்னுருவம் இன்று
கண்ணாடிக்குள் நிழற்படமானது ஏனோ மாமா!!
தொலைவாக இருந்தாலும் எம்துணையாக இருந்தவரே
இனி எப்பிறப்பில் உமை காண்போமோ மாமா!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன் ரவிக்குமார் சொல்லியவை

மருமகன் என்றெண்ணாது உன்மகபோன்று
என்னில் பாசம் வைத்த என் ஆசை மாமாவே!!
தொலைவாக இருந்தாலும் உன்மகளுக்கு என்றும்
துணையாக எம்மோடு இருந்தீரே மாமா!!

மாமா மாமா என்று வாஞ்சையுடன் நாமழைக்க
மருமகன் என்று மனங்குளிர அழைப்பீரே!!
கண்மூடி இங்கு அழுகின்றோம் மாமாவே - இனி
அன்பான உன்குரலை எப்போது கேட்போமோ!!

காலைப்பொழுதில் காற்றோடு வந்த சேதி
பொய்யாகி போகாதோ என்று பொறுமையாக இருந்தோம்
மொத்தமாக எமைமறந்து நீங்கள் - இன்று
தூரபயணம் சென்றதேனோ எம் ஆசை மாமா!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள்
## சானுயா, சந்தோஸ், சயானி சொல்லியவை

அப்பப்பா அப்பப்பா என்று ஆசையோடு நாமழைக்க
அப்பு, ராசா என்று அன்போடு அழைப்பாயே!!
அருகில் எமையணைத்து முத்தமிட்டு கொஞ்சி
முகம் மலர்ந்து சிரிப்பாயே அப்பப்பா!!

ஆண்டுக்கு ஒருமுறை உம்மருகில் வந்து
உடனிருந்து நலம்வினவி எம்மாசை தீர்த்தோமே!!
இனி ஊருக்கு வரும் போதெல்லாம் அப்பப்பா!!
உம் உருவம் நாம் எங்கு தேடுவோமோ!!!

---

## பேரப்பிள்ளைகள்
## சர்வின், சர்னிகா, சர்நிஷா சொல்லியவை

தொலைபேசி தொடர்பில் தொடராக இருந்து
அப்பப்பா அப்பப்பா என்று ஆசையாய் அழைப்போமோ
சின்னவன் பிள்ளை என்று பெயர் வைத்து அழைப்பவரே - இன்று
அப்பப்பா என்று அழைத்துத்தான் தேடுகின்றோம்!!!

செல்லமாய் கதைகள் சொல்லி சிரிக்கவைத்து அதை
சொல்லி சொல்லி மனங்குளிரும் அப்பப்பாவே!!
தொலைபெசி அழைத்து தேடுகின்றோம் - இன்று
தொலைவாகி போனதே உன்குரல் அப்பப்பா!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள்
## சாருஜன், சங்கீத், சிவானி சொல்லியவை

தாத்தா! தாத்தா! என்று நாமழைக்க - எம்மை
தங்கம் தங்கம் என்று அழைத்து மகிழ்பவரே!!
தொலைபேசி தொடரில் முகம்காட்டி நீர் மகிழ்ந்து
எம் முகம்பார்த்து முகமலர்ச்சி கொள்பவரே!!

தாத்தா! தாத்தா! என்று உமையழைத்து தேடுகிறோம்
தங்கம் என்றழைக்க நீர் வரமாட்டாயே தாத்தா!!
கொஞ்ச காலங்கள் என்றாலும் உம்மோடு வாழ்ந்து
மனம் மகிழ்ந்தோமே எம் ஆசைத் தாத்தாவே!!!

---

## பெறாமக்கள் சொல்லி அழுதவை

சித்தப்பா சித்தப்பா பாசமுடன் நாமழைக்க
உம்மகன் போன்றே எமைபார்க்கும் சித்தப்பாவே!!
பெரியவன் சின்னவன் என்று பாசமாய் அழைத்து
நல்வழி காட்டி எமைவளர்த்த சித்தப்பாவே!!!

தந்தைக்கு நிகரான கண்டிப்பு தன்னகம் வைத்து
நல்வாழ்வு நெறிமுறைகள் அறிவுரையில் தந்து
நலமாக நாம் வாழ நல்வழி காட்டியவரே சித்தப்பா!
இப்பிறப்பில் இனி எப்போது காண்போமோ சித்தப்பா!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின் மனக்குமுறல்

மனமென்றும் நிறைவாக மருமக்கள் என்று
மனம்நெகிழ எமையழைக்கும் எம் ஆசை மாமாவே!!
பக்கத்தில் இருந்து பக்குவமாய் கதைபேசி
பாசத்தோடு அரவணைக்கும் எம் ஆசை மாமாவே!!

வீடுதேடி நாம் வந்தால் சிறப்பான உபசாரம்
செய்து எமை மகிழ்வித்து பார்பவரே!!
வீடுவந்து தேடி அழுகின்றோம் மாமா!! - எம்
கண்முன்னே ஒருதடவை வந்து கதைபேசிடு மாமா!!!

## சகோதர, சகோதரிகள் சொல்லி அழுதவை

ஒரு வயிற்றில் உருவாகி ஒருவீட்டில் வளர்ந்து
உற்ற சோதர்களாய் ஒன்றாக வாழ்ந்தோமே!!
அன்போடு எமக்கிருந்த அழகான உடன்பிறப்பே
பாசம் வைத்து பழக உனக்கு நிகர் யார் இங்கே!!!

காலத்தின் கோலத்தாய் சிதறி நாம் வாழ்ந்தாலும்
நீர் பிரிந்த செய்திகேட்டு தேம்பி அழுதும்
உடனோடி வரமுடியா நினையெண்ணி வருந்துகிறோம்
இப்பிறப்பில் எம்சோதரனை எப்போது காண்போமோ!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனிமார் சொல்லியவை

மாறாத அன்பு கொண்ட மாண்புமிகு மைத்துனரே!!
உறவுமுறை கொண்டு எமையழைக்கும் மைத்துனரே
நிகழ்வுகளின் தலைமைக்கு உமைதானே நாடிவந்தோம்
இனிஉம்போல ஒருவரை எங்குநாம் தேடுவோமோ!!!

சமயத்து அருமுதவி சகலருக்கும் புரிபவரே!!
சுகதுக்கம் எல்லாம் உடன்வந்து பார்ப்பவரே!!
மொத்தமாக எமைமறந்து நீங்கள் - இன்று
தூரதேசம் சென்றதுதான் நிஜமாச்சே மைத்துனரே!!

---

## அயலவர்கள் அழுது சொல்லியவை

அயலவர் என்றில்லாது அக்கறையாய் நலம்வினவி
பெரியவன் சின்னவன் என்று அன்போடு அழைப்பீரே!!
வாமையா!! வாமையா!! என்று சொன்னால்
வாய்நிறைவாய் சிரிப்போடு கதைப்பவரே!!!

வாசலிலே இருந்துகொண்டு வாய்நிறைய பேசுவீரே-இன்று
வீதியாய் செல்லும்போது வாசலினை தேடுகிறோம்
வெறுமையோடு இருக்கிறது வீட்டு வாசல் - இனி
எப்போது அதில்உமை பார்போமோ வாமையா!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள் புலம்பியவை

மணிக்கணக்கில் பேசினாலும் மாறாத தெளிவோடு
மனம்விட்டு பேசிடும் நண்பனே வாமா!!
சொந்தக்கதை என்ன நாட்டு நடப்பு என்ன
எதுவானாலும் வெகுவாக பேசிவிடுவாயே நண்பா!!

கையில் கிளைத் தடியோடு வலம் வந்து
விறுவிறு என்று நடக்கும் உன் வேகம்
கண்முன்னே வந்து காற்றோடு கலந்து
கண்ணீராய் தொடர்கிறதே நண்பா எம் வாமா!!!

## தேற்றம்

எங்கே வாழ்க்கை தொடங்கும் - அது
எங்கே எவ்விதம் முடியும்!!
இதுதான் பாதை!!
இதுதான் பயணம்!! - என்பது
யாருக்கும் தெரியாது
பாதையெல்லாம் மாறி வரும்
பயணம் முடிந்துவிடும்
மாறுவது புரிந்துவிட்டால்
மயக்கம் தெளிந்துவிடும்
காலத்தின் கடற்பரப்பில்
கரைசேர்ந்த கால்கள்போல
நிறைவாகி மறைந்துவிட்டார்
வாமதேவன்!!! அவர்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்ப தலைவர் இவ்வுலகில் வாழ்ந்து எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்ற அன்புத் தெய்வம் **அமரர் சின்னத்துரை வாமதேவன்** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் பேஸ்புக் மூலம் அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும் உற்றவிடத்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் இறுதி கிரியைகள் ஆத்மசாந்தி கிரியைகளை நடத்திய சிவாச்சாரியார்களுக்கும் இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**குடும்பத்தினர்**

309, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேண்டும்! வேண்டும்!

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைபட வேண்டும்
கனவு மெய்பட வேண்டும்
கைவசமானது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்
மண் பயனுற வேண்டும்
வாகன மிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார் –

ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம். 0212219129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org